7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

6. 1974 ஆம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வண்டிகள் வரி விதிப்புச் சட்டத்தின்கீழ் சென்னையிலுள்ள தமிழ்நாடு மாநிலச் சட்டப்பணிகள் ஆணையத்திற்குச் சொந்தமான மகிழுந்துக்குச் செலுத்தவேண்டிய ஆயுட்கால வரியிலிருந்து விலக்களித்தது குறித்து உள் (போக்குவரத்து–1) துறையின் 1–4–2015 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 316-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1974 ஆம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வாகனங்கள் வரிவிதிப்பு சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

7. 2015 ஆம் ஆண்டு தமிழ்நாடு சாலையோர வியாபாரிகள் (வாழ்வாதாரத்தைப் பாதுகாத்தல், சாலையோர வியாபாரத்தை முறைப்படுத்துதல் மற்றும் உரிமம் வழங்குதல்) திட்டம், 2015 ஆம் ஆண்டு தமிழ்நாடு சாலையோர வியாபாரிகள் (வாழ்வாதாரத்தைப் பாதுகாத்தலும், சாலையோர வியாபாரத்தை முறைப்படுத்தலும்) விதிகள் ஆகியன இயற்றப்பட்டது குறித்து நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.IV) துறையின் 2–11–2015 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 159-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கைகள். [2014 ஆம் ஆண்டு சாலையோர வியாபாரிகள் (வாழ்வாதாரத்தைப் பாதுகாத்தலும், சாலையோர வியாபாரத்தை முறைப்படுத்தலும்) சட்டத்தின் (மத்தியச் சட்டம் 7/2014) 36(4) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

8. சென்னை சோழிங்கநல்லூரில் நுண்ணுயிர் நீக்கி பையகப்படுத்தும் நிலையத்துடன்கூடிய அதி உயர் வெப்பநிலை பால் ஆலை நிறுவுவதற்கான பணியினை திருவாளர் தேசிய பால்பண்ணை மேம்பாட்டு வாரியம்–ஆனந்திற்கு 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டத்தின் பிரிவு 16(f)–ன் கீழ், வழங்கியது குறித்து நிதி (சம்பளங்கள்)த் துறையின் 20–7–2016 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 214–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 43/1998) 22(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

9. 1988 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் விதிகளில் திருத்தம் செய்தது குறித்து கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்(சிஜே1) துறையின் 9–9–2016 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 110-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 30/1983) 180(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

10. 2015–2016 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகத்தின் இருபத்திரெண்டாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

11. 2015–2016 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு செய்தித்தாள், காகித நிறுவனத்தின் முப்பத்தாறாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

12. 2015–2016 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகத்தின் நாற்பத்தொன்றாவது ஆண்டறிக்கை மற்றும் கணக்குகள். [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ்–ஆங்கிலம்)

13. 2015–2016 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தின் நாற்பத்திரெண்டாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ்–ஆங்கிலம்)

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

–ஏதுமில்லை–

– – – – –